டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்கள் போக்குத் தெரியும் என்று சொன்னால் அது என்னுடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. நான் தவறான வார்த்தை எதையும் பயன்படுத்தவில்லை, அன்பார்லிமென்டரி வெர்டு ஒன்றும் நான் சொல்லவில்லை. நான் ஆவேசமாகப் பேசினாலும் அது பேசுகின்ற கருத்தின் அடிப்படையில்தான் இருக்கும். அன் பார்லிமென்டரி வார்த்தைகளை அப்போதும் நான் உபயோகிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை நடவடிக்கைக் குறிப்பை பின்னால் பார்க்கப் போகிறீர்கள் ; அப்போது தெரியும்.

" நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

என்பதை நடவடிக்கைக் குறிப்பைப் படிக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

(இ) உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் விதிமுறைகள் இல்லாதபோது, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என பேரவை முன்னவர் அறிவித்தது முறைதானா என்பது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். விதி 83, பிரிவு 3-ன்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுவிட்டு, தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

" A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker."

என்ற விதிமுறையின்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். நம்முடைய இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 195-ல் விவரமாக இருக்கிறது.

"Members of the Legislative Assembly and the Legislative Council of a State shall be entitled to receive such salaries and allowances as may from time to time be determined, by the Legislature of the State by law ...."

என்று கிளியராக இருக்கிறது. நேற்று நம்முடைய சட்டமன்ற மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் மூன்று முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்

பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். நம்முடைய அரசியல் சட்டம் 195-வது பிரிவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அதோடு அல்லாமல் ஆர்ட்டிகிள் 246, பிரிவு 38-லும் விளக்கமாக இருக்கிறது.

Seventh Schedule—List II—State List—Item 38.

" Salaries and allowances of members of the Legislature of the State, of the Speaker and Deputy Speaker of the Legislative Assembly and, if there is a Legislative Council, of the Chairman and Deputy Chairman thereof. " என்று இருக்கிறது.

(முற்பகல் 11-30)

அதுமட்டுமல்ல. 42-ல் —Article 246—Seventh Schedule—List II—State List—"State pensions, that is to say, pensions payable by the State or out of Consolidated Fund of the State"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்ட்டிகிள் 366-ல் பென்ஷன் என்றால் என்ன என்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பென்ஷன் சம்பந்தமான விதிகளிலும் சட்டமன்ற உறுப்பினருக்கு பென்ஷன் அளிக்க அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி வழியில்லை. இவற்றை எல்லாம் சொல்வதற்குக் காரணம் சட்டப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெற வழியில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான். அதற்காக நான் இதை எதிர்க்கிறேன் என்று பொருள் அல்ல. இதை நானும் வரவேற்கிறேன். ஆனால் நமது அரசியல் சட்டத்திற்கு விரோதமான ஓர் அறிவிப்பை இங்கே செய்யலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்களுக்காகச் சட்டமே தவிர சட்டத்திற்காக மக்கள் இல்லை. சட்டத்திலே இடம் இல்லை என்றால் சட்டத்தில் இடம் உண்டாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர இது பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க